## களம் காணும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் 2-ஆம் கட்ட தேர்தல் பிரச்சாரம்!

## நாகர்கோவில் – சங்கரன்கோவிலில் இன்று உரையாற்றுகிறார்!

**தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.**

**இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், இரண்டாம் கட்ட பரப்புரையை நேற்று (ஏப்ரல் 3ஆம் தேதி ) திருநெல்வேலியில் தொடங்கினார்.**

**இன்று காலை நாகர்கோவிலிலும், மாலையில் சங்கரன் கோவிலிலும் நடைபெறும் மாபெரும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் உரையாற்றுகிறார்.**



### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் சுற்றுப்பயண விவரம்

**04.04.2026 (சனிக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| காலை 9 மணி | நாகர்கோவில் (பொதுக்கூட்டம்) | கன்னியாகுமரி, நாகர்கோவில், குளச்சல், பத்மநாபபுரம், விளவங்கோடு, கிள்ளியூர் |
| மாலை 5 மணி | சங்கரன்கோயில் (பொதுக்கூட்டம்) | சங்கரன்கோவில், ஆலங்குளம், தென்காசி, வாசுதேவநல்லூர், கடையநல்லூர் |

**05.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| காலை 9 மணி | விருதுநகர் (பொதுக்கூட்டம்) | சாத்தூர், ராஜபாளையம், சிவகாசி, திருவில்லிபுத்தூர், திருச்சுழி, அருப்புக்கோட்டை, விருதுநகர் |
| மாலை 5 மணி | திருமங்கலம் (பொதுக்கூட்டம்) | மேலூர், மதுரை கிழக்கு, சோழவந்தான், மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மத்தி, மதுரை மேற்கு, திருப்பரங்குன்றம், திருமங்கலம், உசிலம்பட்டி |

**குறிப்பு :** கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

---

### சிறுநீர் கட்டுப்பாட்டுச் செயலிழப்பால் ரூ.25 லட்சம் செலவில்

## சிறுமிக்கு சிகிச்சையளித்துள்ள ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை குழுவினருக்குப் பாராட்டு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் – சமூக வலைதளப்பதிவு!

சென்னை, ஏப்.4-

**சிறுநீர்க் கட்டுப்பாட்டுச் செயலிழப்பால் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு தென்னிந்தியாவிலேயே முதல் முறையாக 25 லட்சம் ரூபாய் சிகிச்சை அளித்துள்ள நம் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக் குழுவினரைப் பாராட்டுகிறேன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

சிறுநீர்க் கட்டுப்பாட்டுச் செயலிழப்பால் பாதிக்கப்பட்ட சிறுமிக்குத் தென்னிந்தி யாவிலேயே முதல்முறையாக 25 லட்ச ரூபாய் சிகிச்சையை அளித்துள்ள நம் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக் குழுவினரைப் பாராட்டுகிறேன்!

இத்தகைய சாதனைகள் தொடர, கடைக்கோடி மக்களுக்கும் உயர்தர சிகிச்சையை உறுதிசெய்ய, அமையவுள்ள திராவிட மாடல் 2.0 ஆட்சியில்,

- **மருத்துவக் காப்பீட்டுத் தொகை 10 லட்சம் ரூபாயாக உயர்வு**
- **சென்னை, காஞ்சிபுரம் போன்று, பிற வட்டாரங்களிலும் அரசு மருத்துவமனைகளில் புற்றுநோய்க்கான நவீன சிகிச்சை வசதிகள்**
- **தஞ்சாவூர், தருமபுரி, விழுப்புரத்தில் உயர்சிறப்பு மருத்துவமனைகள்**
- **மண்டல அளவில் கருத்தரிப்பு மையங்கள்**
- **மாவட்ட & வட்ட அளவிலான மருத்துவமனைகளில் டயாலிசிஸ் கருவிகளின் எண்ணிக்கை**




- **இருமடங்காக்கப்படும் உள்ளிட்ட பல வாக்குறுதிகளை** #StalinStatement **என வழங்கியிருக்கிறேன்!**

**நலமான தமிழ்நாடு 2030–க்கு வெல்வோம் ஒன்றாக!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது, சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

## வேலூர் மாவட்டம் - காட்பாடியில் மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்தவர்கள்- அமைச்சர் துரைமுருகன் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்!



வேலூர், ஏப்.4-

வேலூர் மாவட்டம் காட்பாடியில் மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்டவர்கள் கழக பொதுச் செயலாளர், அமைச்சர் காட்பாடி தொகுதி தி.மு.க. வேட்பாளர் துரைமுருகன் அவர்கள் முன்னிலையில் கழகத்தில் இணைந்து கொண்டனர்.

தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் காட்பாடி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடுகிறார் .அதைத் தொடர்ந்து அமைச்சர் துரைமுருகன் காட்பாடி தொகுதியில் உள்ள அனைத்து கிராமங்கள் மற்றும் பகுதிகளுக்குச் சென்று முக்கிய பிரமுகர்களை சந்தித்து ஆதரவு திரட்டி வருகிறார்.

மேலும் பொதுமக்களையும் சந்தித்து வாக்குச் சேகரித்து வருகிறார்.

இந்த நிலையில் காட்பாடி சட்டமன்றத் தொகுதி விருதம்பட்டு வட்ட கழகத்தைச் சேர்ந்த அ.தி.மு.க. கட்சியைச்சேர்ந்த மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளர் மைதிலி கண்ணன் தலைமையில் 50க்கும் மேற்பட்டோர் கட்சியிலிருந்து விலகி, தி.மு.க. பொதுச் செயலாளரும் நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் முன்னிலையில் தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் வடக்கு மாவட்டப் பொறுப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.எம்.கதிர் ஆனந்த், மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன் பகுதிச் செயலாளர் என்.பரமசிவம், வட்டச் செயலாளர் சி.அரி கிருஷ்ணன் மாநகர துணைச் செயலாளர் ஓய். தேவநேசன், மாவட்டப் பிரதிநிதி பன்னீர்செல்வம்,பகுதி இளைஞரணி அமைப்பாளர் சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.